**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

O.S.No.6/2018

DW1 செல்லம்மாள் நாள் 13.03.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் மகன் பெயரில் அவருடைய மனைவி போலீசில் புகார் கொடுத்தது எனக்கு தெரியாது. என் மகன் வெளிநாட்டில் வேலை பார்த்தார். எத்தனை ஆண்டுகள் பார்த்தார் என்று எனக்கு தெரியாது. 1996 ல் வெளிநாட்டில் இருந்தாரா என்று எனக்கு தெரியாது. 1996 ல் ஜனவரி மாதம் என் மகன் வாதியின் தாய் சாந்திக்கு கடிதம் போட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எல்லா விவரமும் தெரியும் என்றும், வயதாகிவிட்டதால் மறதியின் காரணமாக தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியும். என் மகனுக்கு 28.05.1989 ல் திருமணம் ஆனது என்று சொன்னால் சரிதான். திருமணம் ஆகி 3 மாதத்தில் என் மருமகள் பிரிந்துபோய்விட்டார் என்று சொன்னால் சரிதான். என் மகன் வெளிநாட்டில் இருந்து என் மருமகளுக்கு பல கடிதங்கள் எழுதினார் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் அவருடைய மனைவியை நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்யவில்லை. என் மகனுடன் என் மருமகள் 7, 8 வருடங்கள் நன்றாக தான் வாழ்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் வேறு திருமணம் செய்ய போவதை அறிந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பிறகு 1997 வரையிலும் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்தார் என்று சொன்னால் சரியல்ல. விவாகரத்து செய்யாததால் 4-ம் பிரதிவாதி என் மகனின் மனைவி என்று சொன்னால் சரியல்ல. நான் தான் என் மருமகளை மகனுடன் வாழவிடாமல் கொடுமைபடுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி என் மகனுக்கும், 4-ம் பிரதிவாதிக்கும் பிறந்தார் என்று சொன்னால் சரியல்ல. பாகம் கொடுக்ககூடாது என்பதற்காக விவாகரத்து ஆகிவிட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1992 ல் வாதி பிறக்கும்போது ஜெயபிரகாஷ்ம் சாந்தியும் ஒன்றாக தான் இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. வாதி எனக்கு சட்டப்படியான பேத்தி என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஐந்து உயில்களும் பித்தலாட்டமானது என்று சொன்னால் சரியல்ல. என் மகனின் இரண்டாவது திருமணம் செல்லாது என்றும், அதன்மூலம் அவருக்கு பிறந்த குழந்தைகள் சட்டப்படியான வாரிசு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது என் மகன் உயிருடன் இருந்ததால் அவருடைய இரண்டாவது திருமணம் மூலம் பிறந்த குழந்தைகளை வாரிசுகளாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து என் அப்பா எனக்கும் என் கணவருக்கு அவருடைய அம்மாவும் கொடுத்தது. என் கணவரின் சொத்தில் எனக்கும், என் மகனுக்கும், என் மகள் விஜயாவுக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். ஜெயபிரதாவிற்கு அதில் பங்கு இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**